**Government of Karnataka**

# Karnataka School Evaluation and Assessment Board (KSEAB)

Model Question Paper – 01

**SUBJECT CODE: 04 - TAMIL**

II PUC (2024 – 2025)

Time: 3 hours 15 minutes [Total number of Questions: 49] Max Marks: 80

மாணவர்களின் கவனத்திற்கு :

1. கையெழுத்து தெளிவாகவும், அழகாகவும் இருக்க வேண்டும்
2. வினாத்தாளில் கொடுக்கப்பட்டுள்ள வினா எண்களைச் சரியாக எழுத வேண்டும்
3. கட்டுரை ஒரு பக்க அளவில் இருக்க வேண்டும்

பகுதி - ஒன்று

அனைத்து வினாக்களுக்கும் விடை எழுதுக 10 x 1 = 10

I. கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடைகளையும் சேர்த்து எழுதுக

1. கவிஞர் கண்ணதாசன் பிறந்த ஊர்____________________
   (அ) சிறுகூடல்பட்டி (ஆ) ஓலவலசு
   (இ) நாமக்கல் (ஈ) பெரியகுளம்

2. குறிஞ்சி நிலக் கடவுள் ____________________
   (அ) இந்திரன் (ஆ) முருகன்
   (இ) கொற்றவை (ஈ) திருமால்

3. தெய்வப் புலவர் எனப் போற்றப்படுபவர்____________
   (அ) ஜி.யூ. போப் (ஆ) கால்டு வெல்
   (இ) திருவள்ளுவர் (ஈ) பரிதிமாற் கலைஞர்

4. பாரதிதாசன் எழுதிய நூல் ____________
   (அ) தண்ணீர் தேசம் (ஆ) பால்வீதி
   (இ) கனவுக் குதிரைகள் (ஈ) குடும்ப விளக்கு

5. இரைச்சலுக்கு உட்படாத தேசம் ____________
   (அ) மாபன் தேசம் (ஆ) அமெரிக்கா
   (இ) போர்ட்லேண்ட் (ஈ) இலண்டன்

6. கருநாடகத்தில் பக்தி இயக்கத்தை முதலில் தொடங்கியவர் _________
   (அ) மீராபாய் (ஆ) துக்காராம்
   (இ) பசவண்ணர் (ஈ) ஆய்தக்கி மாரய்யா

7. இராமானுஜத்தின் மகள் பெயர் _________
   (அ) மைதிலி (ஆ) கமலா
   (இ) பூங்குழலி (ஈ) விமலா

8. ஜப்பானிய மக்கள் பொறுமைசாலிகள் எனக் கூறியவர் _________

(அ) குருமூர்த்தி (ஆ) ஜானகிராமன்

(இ) யோஷிகி ஈ) ஹிரோமி

9. சிற்பி சாத்தன் யாரின் சிலையை வடித்திருந்தார் _________

(அ) முருகன் (ஆ) திரு மால்

(இ) நடராஜர் சிலை (ஈ) பிரம்மன்

10. வெகு நாட்களாக வேலப்பனின் வேலையைக் கவனித்து வந்தவர் _________

(அ) மாதவராயன் (ஆ) கணேசன்

(இ) முருகேசன் (ஈ) விந்தன்

II. கோடிட்ட இடங்களைச் சரியான விடையைக் கொண்டு நிரப்புக 5×1=5

11. உள்ளுவ தெல்லாம் _________ (தாழ்வுள்ளல் / உயர்வுள்ளல்)
12. சங்கு கைத் தாங்கி தரும மூர்த்தி_________ (விஷ்ணு/சிவன்)
13. ஊனாடிய திருமேனி கொண்டு _________உலகு (மறைந்தார் /உதித்தார்)
14. தமிழர் வளர்த்த அழகுக் கலைகளில் மிகப் பழமையானது _________ (இசைக்கலை/ நாடகக் கலை)
15. ஆசிரியப்பாவின் இராகம் _________ (தோடி /சங்கராபரணம்)

III பொருத்துக 5×1=5

| | | |
|---|---|---|
| 16. (அ) இராசராச சோழன் | : | (i) கஞ்சக் கருவி |
| (ஆ) கலிப்பாவின் இராகம் | : | (ii) காம்போதி |
| (இ) தாளம் | : | (ili) கலியாணி |
| (ஈ) பரிபாடல்கள் | : | (iv) பந்துவராளி |
| (உ) மகிழ்ச்சிக்குரிய இராகம் | : | (v) இசைப் பாடல்கள் |
| | | (vi) தஞ்சை பெரிய கோவில் |

## பகுதி - இரண்டு.

### பிரிவு -1

(அ) எவையேனும் இரண்டு வினாக்களுக்கு இரண்டு அல்லது மூன்று வாக்கியங்களில் விடை எழுதுக. 2 x 2 =4

17. புலவர் குழந்தை அவர்கள் தமிழ்த்தாயின் அணிகலன்கள் என்று கூறும் நூல்கள் யாவை?

18. பன்னிரு சார்புகளை எழுதுக.

19. அருக தேவனின் பெருமையைத் திருத்தக்கத் தேவர் எவ்வாறு போற்றுகிறார்?

பிரிவு-2

(ஆ) எவையேனும் இரண்டு வினாக்களுக்கு இரண்டு அல்லது மூன்று வாக்கியங்களில் விடை எழுதுக:- 2 x 2=4

20 டாக்டர் அம்பேத்கர் சைமன் கமிசன் முன்பு அளித்த சாட்சியத்தை எழுதுக.

21. தொடர்ந்து இரைச்சலைக் கேட்பதின் விளைவுகள் யாவை?

22 ஐந்திணைகளுக்குரிய இராகங்கள் எவை எவை?

பிரிவு-3

(இ) ஏதேனும் ஒன்றனுக்கு இரண்டு அல்லது மூன்று வாக்கியங்களில் விடை எழுதுக : 1 x 2 = 2

23. புதுமைப் பித்தன் அஸ்தமன சூரியனின் ஒளியை எவ்வாறு காட்சிப் படுத்துகின்றார்?

24. வேலப்பனின் குடும்பம் கட்டில் வேலையை எவ்வாறு பகிர்ந்து கொள்கிறது?

பகுதி - மூன்று

எவையேனும் மூன்று வினாக்களுக்கு இடம் சுட்டிப் பொருள் விளக்கம் எழுதுக. 3 x 3=9

25. 'மாணுண் டெஞ்சிய கலிழி நீரே'

26. 'மாடு கறந்தனள்; வீட்டை நிறம் புரிந்தனள்'

27. 'பார்சிகளின் விடுதியில் இருந்தும் வெளியேற்றப்பட்டார்'

28. முன்னாளில் சங்கு வாணியம் அவ்வூரில் நன்கு நடை பெற்றது .

29. 'பாருங்க சாமீ, இவதான் என் மக கங்கா, அந்த கங்கையே தான் இவ?'

30. மஞ்சானத்தி மெயின் ரோட்ல ஒரு டாக்டர் இருக்கார் அங்கேயே ஜிம்மியைக் கூட்டிப் போகலாம்.

பகுதி - நான்கு

பிரிவு-1

(அ) எவையேனும் இரண்டு வினாக்களுக்கு ஐந்து அல்லது ஆறு வாக்கியங்களில் விடை எழுதுக. 2 x 4 = 8

31. ஊக்கமுடைமையின் சிறப்பினைத் திருவள்ளுவர் வழி நின்று விளக்குக -

32. கண்ணகி மணிமேகலைக்குக் கூறிய அறிவுரைகள் யாவை?

33. உள்ளத்தில் காண்பாய் கவிதையில் தோழியின் விடையாகக் கவிஞர் றுவனவற்றை எழுதுக –

பிரிவு - 2

(ஆ) எவையேனும் இரண்டு வினாக்களுக்கு ஐந்து அல்லது ஆறு வாக்கியங்களில் விடை எழுதுக. 2 x 4=8

34. இஸபெல்லா கனவு கண்டபின் அவளது அன்றாட பழக்கங்கள் எவ்வாறு இருந்தன என்பதை விவரி?

35. ஒலி மாசு உண்டாவதற்கான காரணங்களை விளக்கி வரைக.

36. இசை எழுப்பும் ஐந்து வகைக் கருவிகளை விளக்கி எழுதுக.

பிரிவு-3

(இ) ஏதேனும் ஒன்றனுக்கு ஐந்து அல்லது ஆறு வாக்கியங்களில் விடை எழுதுக. 1×4=4

37. எந்தெந்த விசயங்களை ஜானகிராமனிடம் பேசக் கூடாதென்று யோஷிகி ஹோட்டல் பணிப் பெண்ணிடம் கூறியிருந்தார்?

38. மகனுக்கு உடல் நிலை சரியில்லாத போது வைரவன் செட்டியார் காப்பாற்றிய விதத்தை எழுதுக!

பகுதி – ஐந்து

பிரிவு -1

(அ) கீழ்க்காணும் பாடலின் பொருளை எழுதி அணியை விளக்குக 1×4=4

39. (அ) வெள்ளத்தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத் தனையது உயர்வு

(அல்லது)

39 (ஆ) உம்ப ரில்வழி இம்பரிற் பல்பிறப்பு
யாங்கணும் இருவினை உய்த்து, உமைப் போல
நீங்கரும் பிறவிக் கடலிடை நீந்திப்
பிறந்தும் இறந்தும் உழல்வோம்.......

பிரிவு -2

(ஆ) எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் வி எழுதுக. 4 x 2 = 8

40. சேர்த் தெழுதுக !

1. பூ + பொழில்
2. புனல்+இடை

41. பிரித் தெழுதுக :

1. எனக் களிக்கும்
2. தெளிவிலா

42. இலக்கணக் குறிப்பு தருக

1. புனைமலர்
2. இளந்தென்றல்

43. கீழ்வரும் தொடர்களை நல்ல தமிழில் எழுதுக

1. நான் ட்ராயிங் நோட்டில் உள்ள பிச்சர்க்கு கலர் கொடுத்தேன்.
2. இன்பா, 'ஆபிஸ் பைலை எடுத்துக் கொண்டு வா'

44. சொற்களின் பொருள் வேறுபாடு உணர்ந்து வாக்கியங்களில் பயன்படுத்தி எடுதுக. (களை, கழை)

1. ஓங்கி உயர்ந்து வளர்வது ______

2. நண்பனின் துன்பத்தை ______

45. அடைப்பிற்குள் கேட்டவாறு வாக்கியங்களை மாற்றி எழுதுக.

1. ஓவியங்கள் சிதைந்து போயின ( பிற வினை)

2. இளமையில் கற்க வேண்டும் (கட்டளை வாக்கியமாக மாற்றுக)

46. வல்லெழுத்து மிகும் இடங்கள் (இரண்டாம் வேற்றுமை, நான்காம் வேற்றுமையில் வல்லினம் மிகுதல்)

1. பொருளை + தேடினான்

2. ஊருக்கு + சென்றான்

பகுதி - ஆறு

பிரிவு -1

(அ) கீழ்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்றிற்கு கட்டுரை வடிவில் விடை எழுதுக - 1 x 5 = 5

47 (அ) "கேரள பேரழிவுக்கான காரணமும், நிவர்த்தி செய்யும் வழி முறைகளும்" குறித்து உன் பார்வையில் கட்டுரை வடிவில் எழுதுக

(அல்லது)

(ஆ) 'இந்தியர்களின் பண்பாடும் கலாச்சாரமும்' குறித்து கட்டுரை வடிவில் எழுதுக.

பிரிவு -2

(ஆ) கீழ்க்காணும் வினாக்களில் ஏதேனும் ஒன்றிற்கு விடை எழுதுக. 1×4=4

48. உனது பள்ளியில் நடைபெற்ற விளையாட்டு போட்டி குறித்து உன் நண்பனுக்கு கடிதம் ஒன்று எழுதுக -

(அல்லது)

49. கீழே கொடுக்கப்பட்டுள்ள பழமொழிகளை தமிழில் மொழி பெயர்த்து எழுதுக.

1. charity begins at home

2. covet all lose all

3. Diamonds cut diamonds

4. Empty vessels make the greatest Sound.